# 31.10.2012 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாட்டின் மின்நிலைமை குறித்து அளித்த விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று இந்த அவையில், சற்று முன்பு மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள் ஒரு நாடகத்தை அரங்கேற்றி நடத்தினார்கள். இன்று தமிழ்நாட்டில் நிலவுகின்ற மின் நிலைமை குறித்து அனைவருக்கும் கவலைதான். அனைவரும் இதைப்பற்றித்தான் பேசுகிறார்கள். ஆகவே, இன்று 'Zero Hour' நேரத்தில் இந்த மின்சார நிலைமை பற்றி பிரச்சனை எழுப்புவதற்கு தங்களிடம் அனுமதி கேட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அனுமதி அளித்தீர்கள். இந்தப் பேரவையில் எந்தக் கட்சி உறுப்பினராக இருந்தாலும் ஒரு பொதுப் பிரச்சனையை எழுப்புகின்றபோது அதன் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும், அந்தப் பிரச்சனை குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது, அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதையெல்லாம் தெரிந்து கொள்ளவும், ஒரு குறிப்பிட்ட பிரச்சனை குறித்து அரசின் விளக்கம் என்ன என்பதைக் கேட்டு, அரசின் பதிலைப் பெறவும்தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பிரச்சனைகளை எழுப்ப அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், பிரச்சனையை எழுப்பிவிட்டு, அதன்பின்னர் அதற்கு நான் பதில் சொல்ல எழுந்ததால் என்னைப் பேச விடாமல் அவர்கள் இங்கே ஒரு பெரிய நாடகத்தை நடத்தினார்கள். இறுதியில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வேறு வழியின்றி நடவடிக்கை எடுத்து, அவர்களை அவையைவிட்டு வெளியேற்ற வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலையை, ஒரு கட்டாயத்தை மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு ஏற்படுத்திவிட்டார்கள். இதனுடைய நோக்கம் என்ன? இதற்குப் பின்னால் இருக்கின்ற உள் நோக்கம் என்ன? என்னைப் பேச அனுமதித்தால், எனது பதிலைக் கேட்டுவிட்டால் தவறு எங்கே இருக்கிறது தவறு யார்மீது இருக்கிறது என்பது தெரிந்துவிடும். இன்று தமிழகத்தில் அனைத்துத் தரப்பு மக்களையும் பாதித்திருக்கும் கடுமையான, மோசமான மின் வெட்டுக்குக் காரணமே முந்தைய தி.மு.க. அரசுதான் என்பது வெட்ட வெளிச்சமாகிவிடும். நான் தெரிவிக்கப் போகின்ற உண்மைகளுக்கு அவர்களால் பதில் சொல்ல முடியாது என்பதற்காகத்தான் இந்த அவையை விட்டு அவர்கள் வெளியேறிவிட்டார்கள். அதன்பிறகு மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதே பிரச்சனையைக் குறித்து இங்கே பேசினார்கள், அரசின் கவனத்தை ஈர்த்தார்கள். மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் நோக்கம் bonafide ஆக இருக்கிறது; அதாவது உண்மையாக ஒரு பிரச்சனையை எழுப்பி, அரசினுடைய விளக்கம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உண்மையான ஆர்வத்தோடு அவர்கள் இந்தக் கேள்வியை கேட்டு இருப்பதால் இப்போது நான் பதில் சொல்ல விழைகிறேன்.

தமிழ்நாட்டில் நிலவி வருகின்ற மின் பற்றாக்குறை குறித்து அனைவரும் மிகுந்த கவலை தெரிவித்து வருகின்றனர். இந்த பற்றாக்குறை ஏற்பட்டதற்கான காரணங்களையும், அவற்றையெல்லாம் சீர் செய்து தமிழகத்தை மீண்டும் மின் மிகை மாநிலமாக மாற்ற இந்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் நான் விரிவாக அண்மையில் தொலைக்காட்சி மூலம் தமிழக மக்களுக்கு விளக்கியிருக்கிறேன். நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி, தற்போது தமிழகத்தில் நிலவி வரும் மின் பற்றாக்குறைக்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசும், காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசும் தான் காரணம். அவற்றையெல்லாம் நீக்கி மின் நிலைமையை சீர் செய்யும் மிகப் பெரும் பொறுப்பை எனது தலைமையிலான அரசு செய்து வரும் இந்த வேளையில், இந்த மின் தட்டுப்பாட்டு நிலைமைக்கு காரணம் எனது அரசு தான் என்று ஒருசில எதிர்க்கட்சிகள் கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

நான் ஆட்சிக்கு வரும்போதெல்லாம், எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடன் மின் நிறுவு திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். 1991 முதல் 1996 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில் புதியதாக 1,302 மெகாவாட் மின் நிறுவு திறனும், 2001 முதல் 2006 வரையிலான ஆட்சிக் காலத்தில் புதியதாக 2,518 மெகாவாட் மின் நிறுவு திறனும் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், திமுக ஆட்சிக் காலத்தில், 1996–2001–ல் 561 மெகாவாட்டும், 2006–2011–ல் வெறும் 206 மெகாவாட் மட்டுமே கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது.

2001 முதல் 2006 வரை எனது தலைமையிலான ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றபோது, மின்தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லாத நிலைதான் நிலவியது. இன்னும் சொல்லப்போனால், மின் மிகை மாநிலமாக தமிழகம் விளங்கியது. கூடுதல் மின்சாரத்தை பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்ததன் மூலம் கூடுதல் வருவாயும் தமிழகத்திற்கு கிடைத்தது.

2006–ல் நான் ஆட்சிப் பொறுப்பை விட்டுச் சென்ற போது தமிழ்நாடு மின் மிகை மாநிலமாகத்தான் விளங்கியது. இதை, அடுத்து ஆட்சிக்கு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசே ஏற்றுக் கொண்டது. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின்சாரத் துறை அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமி, 3.4.2007 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2007–2008–ஆம் ஆண்டிற்கான எரிசக்தி மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசுகையில், "… நாம் மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாகத்தான் இருக்கிறோம். இந்தியாவிலேயே மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாக இருப்பது தமிழ்நாடு மட்டும்தான். இப்போது மராட்டிய மாநிலத்திற்கு உபரி மின்சாரத்தை விற்பனை செய்கிறோம். பஞ்சாப் மாநிலத்திற்கு விற்பனை செய்கின்றோம். ..." என்று பேசி இருக்கிறார் என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதன் பின்னர், ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே வரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு, எனது ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்ட புதிய மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்காததாலும், தொலைநோக்குப் பார்வையோடு மாநிலத்தின் மின் நிறுவு திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காததாலும், மின் நிலையங்களை சரிவர பராமரிக்காததாலும், 2006–ல் மின் மிகை மாநிலமாக இருந்த தமிழகம் 2008–ல் மின் குறை மாநிலமாக ஆகிவிட்டது. இது இன்றுவரை தொடர்ந்து வருகின்றது.

மின் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கான நிர்வாகத் திறமைதான் இல்லை. நீண்டகால அடிப்படையிலாவது மின்சாரத்தை கொள்முதல் செய்திருக்கலாம். அதாவது Case-1 என்கிற அடிப்படையில் ஒப்பந்தத்தை மேற்கொண்டு இருக்கலாம். அதையும் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்யவில்லை. மாறாக, குறுகிய கால அடிப்படையில் மின்சாரத்தை கொள்முதல் செய்தார்கள். அதாவது, அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்பட்டது. இதன் காரணமாக மின்சார வாரியத்திற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது.

2008 ஆம் ஆண்டிலேயே நீண்டகால அடிப்படையில் மின்சாரத்தை கொள்முதல் செய்திருந்தால், மிகக் குறைந்த விலையிலேயே மின்சாரத்தை தொடர்ந்து பெற்றிருக்க முடியும். இதனை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்யத் தவறியதால், தற்போது கடுமையான மின் தட்டுப்பாடு நிலவுகிறது.

தென் மாநிலங்கள், மற்ற மாநிலங்களுடன் இணைக்கப்படுகின்ற வகையில், தேவைக்கேற்ப மின் வழித்தடங்களை, அதாவது transmission corridor–களை மத்திய அரசு ஏற்படுத்தாத காரணத்தால் மின்சாரத்தை கடத்தும் வழித்தடத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மின் கடத்தும் வழித்தடத்தில் நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து,

நீண்டகால அடிப்படையில் கொள்முதல் ஒப்பந்தங்களை செய்து கொண்ட மாநிலங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு நீண்டகால கொள்முதல் ஒப்பந்தங்களை ஏற்படுத்தாததன் காரணமாக, வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு போதுமான மின்சாரத்தை கொள்முதல் செய்ய முடியாத நிலை உள்ளது. தற்போதும் கூட பிற மாநிலங்களிலிருந்து 1,100 மெகாவாட் மின்சாரம் பெறக்கூடிய ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. ஆனாலும், மின் வழித்தடத்தில் உள்ள நெருக்கடி காரணமாக 85 மெகாவாட் மட்டுமே பெற முடிகிறது.

இந்தச் சூழ்நிலையில் தான், 1,000 மெகாவாட் மின்சாரத்தை மையத் தொகுப்பிலிருந்து வழங்குமாறும், தென் மாநிலங்களை மற்ற மாநிலங்களோடு இணைக்கும் வகையில் உயர்திறன் கொண்ட மின் வழித்தடங்களை அமைக்கக் கோரியும் பாரதப் பிரதமருக்கு பல கடிதங்கள் எழுதியிருந்தேன். நாம் கேட்ட 1,000 மெகாவாட்டிற்கு பதிலாக 100 மெகாவாட் மின்சாரத்தை மட்டுமே மத்திய அரசு அளித்தது. இருப்பினும், மின் வழித்தடத்தில் உள்ள நெருக்கடி காரணமாக, அதிலும் 78 மெகாவாட் மின்சாரம் மட்டுமே தற்போது கிடைக்கப் பெற்று வருகிறது.

1.11.2012 முதல் 31.3.2013 வரையிலான காலத்திற்கு டெல்லி மாநில அரசால் தனக்குத் தேவையில்லை என்று ஒப்படைக்கப்பட்ட 1,721 மெகாவாட் மின்சாரத்தை தமிழகத்திற்கு அளிக்க வேண்டும் என்று நான் பாரதப் பிரதமருக்கு கோரிக்கை விடுத்திருந்தேன். இதற்கும் மத்திய அரசு செவி சாய்க்காத காரணத்தால், இது தொடர்பாக மத்திய அரசுக்கு உத்தரவு வழங்கக் கோரி உச்ச நீதிமன்றத்தை அணுக எனது தலைமையிலான அரசு முடிவெடுத்தது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் முதல் அலகில் உற்பத்தி செய்யப்படும் 1,000 மெகாவாட் மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்கே வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி நான் பாரதப் பிரதமருக்கு கடிதங்கள் எழுதியுள்ளேன். நேரிலும் இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளேன். இதற்கும் சாதகமான பதிலை மத்திய அரசு அளிக்கவில்லை.

எனவே, நீண்ட கால அடிப்படையில், அதாவது Case-I அடிப்படையில் மின்சாரத்தை கொள்முதல் செய்ய முன்னுரிமை அளிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டும், இதன்மூலம் மலிவான விலையில் கணிசமான மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய முடியும் என்பதாலும், நீண்டகால அடிப்படையில் மின்சாரத்தை கொள்முதல் செய்யும் வகையில் புதிய ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதற்கான அனுமதி வேண்டி தமிழ்நாடு மின் ஒழுங்கு முறை ஆணையத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஆணையத்தின் அனுமதி பெற்றபின் ஒப்பந்த புள்ளிகள் கோரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், புதிய மின் நிலையங்கள் அமைப்பதிலும் மத்திய அரசு இடர்ப்பாடுகளை ஏற்படுத்தி வருகிறது. மாநிலங்கள் அமைக்க விரும்பும் புதிய மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியை தருவதற்கான 'எரிபொருள் வழங்கல் ஒப்பந்தம்' (Fuel Supply Agreement) செய்ய மறுத்து வருவதோடு, ஏற்கெனவே இயக்கத்தில் உள்ள மின் நிலையங்களுக்கும் போதுமான நிலக்கரியை மத்திய அரசு வழங்குவதில்லை. தேவையில் 80 விழுக்காடு நிலக்கரியை மட்டுமே, ஓதுக்கீடு செய்து, Linkage அளித்து, அதிலும் மொத்தத் தேவையில் 70 விழுக்காட்டிற்கும் குறைவாகவே மத்திய அரசு நிறுவனமான இந்திய நிலக்கரி நிறுவனம் linkage அளித்து வருகிறது. இது மட்டுமல்லாமல், புதிய திட்டங்களுக்கான அனுமதியை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் காலவரையின்றி தாமதப்படுத்துகிறது.

2001–2006–ஆம் ஆண்டுகளில், தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக விளங்கிய போதிலும், நீண்டகாலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, புதிய மின் உற்பத்தித் திட்டங்களை கண்டறிந்து அவற்றை நிறைவேற்றுவதில் நான் மிகுந்த கவனம்

செலுத்தினேன். அவை, எனது அரசால் தொடங்கப்பட்டவை என்ற காரணத்தினாலோ அல்லது அலட்சியத்தினாலோ அல்லது நிர்வாகத் திறமையின்மையினாலோ அல்லது கையாலாகாத்தனத்தாலோ பின்னர் பொறுப்பிற்கு வந்த மைனாரிட்டி திமுக அரசு, இவற்றை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தவில்லை.

உண்மை நிலை இவ்வாறிருக்க, மின் துறையில் தான் ஏதோ மிகப் பெரிய சாதனைகளை நிகழ்த்திவிட்டது போல், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் அடங்கிய கடிதத்தினை தி.மு.க.வினருக்கு எழுதியுள்ளார் திரு. கருணாநிதி.

அந்தக் கடிதத்தின் ஆரம்பத்திலேயே சீருடைப் பணியாளர்களுக்கான வீடுகள் கட்டித் தரும் பணிக்கு அடிக்கல் நாட்டிய விழாவிலே மின்சாரத்தைப் பற்றி நான் பேசியதாக கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி. மின்சாரத்தைப் பற்றி காவல் துறை விழாவிலே நான் ஒருவரி கூட பேசவில்லை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "முதல் கோணல் முற்றும் கோணல்" என்று சொல்வார்கள். அதுபோல, அந்தக் கடிதம் முழுவதும் உண்மைக்கு மாறான தகவல்களை கொண்டதாக உள்ளது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்னென்ன திட்டங்கள் தொடங்கப்பட்டன என்பதை நான் ஏன் தெரிவிக்கவில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார் திரு கருணாநிதி. மின் பற்றாக்குறை நிலையைப் பற்றி சுருக்கமாக எடுத்துக்கூறிய ஒரு உரையில் பலமுறை தெரிவித்த விவரங்கள் தேவையில்லை என்பதால் தான் நான் அவற்றை குறிப்பிடவில்லை. இருப்பினும், திரு. கருணாநிதியின் கடிதத்தில் உள்ள தகவல்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்பதை இந்த மாமன்றத்திற்கு எடுத்துரைப்பதும், அதே சமயத்தில் நாங்கள் எடுத்த நடவடிக்கைகளை இங்கே சுட்டிக்காட்டுவதும் எனது கடமை என்று கருதுகிறேன்.

எனது முந்தைய ஆட்சி காலமாகிய 2001–2006 ஆம் ஆண்டுகளில் வல்லூரில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12.7.2002 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் எனது முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ 19.6.2003 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை நிறுவ 12.12.2005 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது.

500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையம் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் 8.9.2005 அன்று துவக்கப்பட்டன.

ராமநாதபுரம் மாவட்டம் வழுதூரில் 95 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் நிலையத்தை நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 29.9.2004 அன்று எரிவாயு வழங்குவதற்காக இந்திய எரிவாயு ஆணையத்தோடு ஒப்பந்தம் கையெழுத்தானது. மார்ச் 2006–ல் ஒப்பந்தம் கோருவதற்கான பணிகள் முடிவடைந்தன. அதாவது, 3,095 மெகாவாட் அளவுக்கான மின்சார உற்பத்தி திட்டங்களை அப்போதே எனது ஆட்சிக் காலத்தில் தொடங்கினோம்.

திரு. கருணாநிதி தன்னுடைய கடிதத்தில், எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் 8.12.2006 அன்று முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டதாகவும், அதன் உற்பத்தி 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கும் என்றும் தெரிவித்திருக்கிறார். இது முற்றிலும்

உண்மைக்கு மாறானது. உண்மை நிலை என்னவென்றால், நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமிழகத்தின் மின் நிலைமை குறித்து விரிவாக ஆய்வு நடத்திய போது, இந்தத் திட்டம் ஆரம்பகட்ட நிலையிலேயே உள்ளதாக மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர். இதனையடுத்து, எண்ணூரில் 660 மெகாவாட் திறன் கொண்ட Super Critical மின் திட்டத்தை செயல்படுத்த நான் ஆணையிட்டேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், 26.10.2012 அன்று சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

அடுத்தபடியாக, வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஒரு மின் திட்டம் 26.6.2007 அன்று தொடங்கப்பட்டதாகவும், 2011 மே மாதம் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்றும், இதன் உற்பத்தி விரைவில் தொடங்க இருப்பதாகவும் திரு. கருணாநிதி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதிலும் பல உண்மைகளை மறைத்துள்ளார் திரு. கருணாநிதி. இந்த அனல் மின் திட்டத்தை துவங்குவதற்கு 12.12.2005–அன்று எனது ஆட்சிக் காலத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் திட்டம் 2011 ஆம் ஆண்டு மே மாதம் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்று தனது அறிக்கையிலேயே திரு. கருணாநிதியே கூறியிருக்கிறார். 2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இரண்டு வாரங்கள் வரை முதலமைச்சராக திரு. கருணாநிதி தான் இருந்தார். எனவே, இந்தத் திட்டத்தை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை என்பதை திரு. கருணாநிதி தான் தெளிவுபடுத்த வேண்டும். உண்மை நிலை என்னவென்றால், நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, இந்தத் திட்டத்தில் 50 விழுக்காட்டிற்கும் குறைவான பணிகளே நடந்திருந்தன. பின்னர் நான் அந்தத் திட்டத்தை துரிதப்படுத்தியதன் காரணமாக, 2013 ஏப்ரலில் இருந்து 600 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, உடன்குடியில் பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து ஒவ்வொன்றும் 800 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு திட்டங்கள் அக்டோபர் 2007–ல் தொடங்கப்பட்டதாகவும், இவற்றிலிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் மின்சாரம் பெறப்படும் என்றும் கூறியுள்ளார் திரு. கருணாநிதி. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை நிலை. உண்மை நிலை இவ்வாறிருக்க, 2013 ஆம் ஆண்டு முதல் இங்கிருந்து மின்சாரம் கிடைக்கும் என்று திரு. கருணாநிதி கூறியிருப்பது நகைப்புக்குரியதாக உள்ளது. திரு. கருணாநிதியின் கற்பனைக்கு அளவே இல்லை. இந்தத் திட்டம் துவங்கப்படாததன் காரணமாக, இதனை விரைந்து நிறைவேற்றும் பொருட்டு, தமிழ்நாடு அரசின் திட்டமாக செயல்படுத்த நான் ஆணையிட்டேன். இது இந்த மாமன்றத்திலும் என்னால் எடுத்துரைக்கப்பட்டது. தமிழக அரசே செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன.

வடசென்னை அனல் மின் நிலையத்திலேயே மேலும் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஒரு திட்டம் 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும் என்றும், எனது தலைமையிலான அரசு விரைந்து நடவடிக்கை எடுக்காததால், மின் உற்பத்தி தாமதமாகிறது என்றும் தெரிவித்துள்ளார் திரு. கருணாநிதி. இதில் எள்ளளவும் உண்மை இல்லை. உண்மை நிலை என்னவென்றால், நான் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, இந்தத் திட்டத்தில் 40 விழுக்காடு பணிகள் மட்டுமே முடிவடைந்திருந்தன. அப்படி இருக்கும்போது திரு. கருணாநிதி கூறுவதைப்போல் இந்தத் திட்டம் 2011 ஆகஸ்ட் மாதம் எப்படி நடைமுறைக்கு வந்திருக்க முடியும்? முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினரால் விட்டுச் செல்லப்பட்ட இந்தப் பணிகளை நான் தற்போது முடுக்கிவிட்டுள்ளேன். இதன் காரணமாக, 2013 ஆம் ஆண்டு மே

மாதத்திலிருந்து இந்தத் திட்டத்தின்மூலம் நமக்கு 600 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

600 மெகாவாட் மின்திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம் 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், 2011 ஆம் ஆண்டு மே மாதம் நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, சுமார் 55 விழுக்காடு பணிகளே முடிவடைந்திருந்தன. பின்னர் மீதமுள்ள பணிகளை நாங்கள் விரைவுபடுத்தியதன் காரணமாக, இந்த அனல் மின் நிலையம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தனது உற்பத்தியை துவங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குஜராத்திலிருந்து மின்சாரம் வாங்க ஒப்பந்தம் போடும்போதே அதை தமிழகத்திற்கு கொண்டு செல்ல வழி இருக்கிறதா என்று கூட தெரியாமல் நான் ஒப்பந்தம் போட்டதாக திரு. கருணாநிதி தனது கடிதத்தில் கூறியிருக்கிறார். விவரம் புரியாதது எனக்கா அல்லது திரு. கருணாநிதிக்கா என்பதை இப்போது நான் விளக்கி கூற விரும்புகிறேன். மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தம் போட்ட பிறகு தான் வழித்தடத்தை ஒதுக்கீடு செய்ய மத்திய மின் தொடர் அமைப்பு நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என்பதுகூட ஐந்து முறை முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதிக்கு தெரியவில்லையே என்பது நகைப்புக்குரியதாக இருக்கிறது. அதாவது தமிழ்நாடு வேறு ஒரு மாநிலத்தோடு மின்சாரத்தை வாங்க ஒப்பந்தம் போட்ட பிறகுதான் நாம் மத்திய மின் தொடர் அமைப்பை அணுகி எங்களுக்கு வழித்தடத்தை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று கேட்க முடியும். ஆனால், இவர் என்ன கேட்கிறார் திரு. கருணாநிதி? வழித்தடத்தில் நெருக்கடி இருக்கிறது, மின்சாரத்தை கொண்டுவர முடியவில்லை, குஜராத்துடன் போட்ட ஒப்பந்தப்படி மின்சாரத்தை இங்கே கொண்டுவர முடியவில்லை என்று சொன்னால், திரு. கருணாநிதி கேட்கிறார், ஏன் நீங்கள் ஒப்பந்தம் போடும்போதே இதற்கு வழி இருக்கிறதா? இல்லையா என்று நீங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை என்கிறார். மேலும், பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்கு தற்போதுள்ள மின் வழித்தடங்களில் முன்னுரிமை அளிக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. அதை மத்திய அரசு செய்ய தவறியுள்ளதால்தான், தற்போது நாங்கள் உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

நான் அளித்துள்ள இந்த விளக்கங்களிலிருந்து பல்வேறு மின் திட்டங்கள் மூலமாக 2014 வரை 7,798 மெகாவாட் மின்சாரம் கிடைப்பதற்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு வழி செய்ததாக திரு. கருணாநிதி கூறியிருப்பது வெறும் கற்பனைக் கதை என்பது மாமன்ற உறுப்பினர்களுக்கு தெள்ளத் தெளிவாக புரிந்திருக்கும்.

2011 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல் சுற்றுப் பயணத்தின்போது, தமிழ்நாட்டின் மின்வெட்டு நிலைமையை மூன்றே மாதங்களில் சீர் செய்வேன் என்று வாக்குறுதி கொடுத்ததாக தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியும், இன்னும் சிலரும் தவறான தகவல்களை மக்களிடையே பரப்பி வருகின்றனர். இது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. இது போன்ற எந்த வாக்குறுதியையும் நான் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், மின்வெட்டு என்பது மிகவும் மோசமடைந்து, மக்களுக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும் என்பதே தெரியாத நிலை தமிழகத்தில் நிலவியது. மின் உற்பத்திக்கும், மின் தேவைக்கும் இடையே கிட்டத்தட்ட 4,000 மெகாவாட் இடைவெளி இருந்தது. திரு. கருணாநிதி தலைமையிலான ஆட்சி என்றாலே அனைத்தும் அதலபாதாளத்திற்குச் சென்றிருக்கும் என்பதும், அதை சீர்செய்ய பல ஆண்டுகள் ஆகும் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று. இதை நானும் நன்கு அறிவேன். இந்தச் சூழ்நிலையில், மின்வெட்டை மூன்றே மாதங்களில் சீர்செய்வேன் என்ற

வாக்குறுதியை நான் எப்படி கொடுத்திருக்க முடியும்? இத்தகைய வாக்குறுதியை, நான் எந்த நேரத்திலும் அளிக்கவில்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, புதிய மின்திட்டங்களை முழுமையான செயல்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் காரணமாக 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம் மற்றும் 500 மெகாவாட் மின்திறன் கொண்ட வல்லூர் மின் திட்டத்தின் முதல் அலகு டிசம்பர் 2012–லிருந்தும், 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு மார்ச் 2013–லிருந்தும், 600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டத்தின் முதல் அலகு ஏப்ரல் 2013–லிருந்தும் முழு உற்பத்தியைத் தொடங்க இருக்கின்றன. இவைகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு 1,900 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

அதுபோலவே, 600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு மே 2013–லிருந்தும், 500 மெகாவாட் மின் திறன் கொண்ட வல்லூர் அனல் மின் திட்டத்தின் மூன்றாவது அலகு அக்டோபர் 2013–லிருந்தும், 1,000 மெகாவாட் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் இரண்டு அலகுகள் டிசம்பர் 2013–லிருந்தும் முழுமையாக செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளன. இவைகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு 1,330 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். ஆக, மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்கள் மூலம் 2013 ஆம் ஆண்டில் 3,230 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்கும். இவைமட்டுமல்லாமல், கூடங்குளம் அணுமின் திட்டத்திலிருந்து 925 மெகாவாட் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் இரண்டாவது கட்ட விரிவாக்க திட்டத்திலிருந்து 230 மெகாவாட் கிடைக்கும். மொத்தத்தில், 2013 ஆம் ஆண்டு இறுதியில் 4,385 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்கும்.

இதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு புதிய மின் திட்டங்களை தொடங்கவும் எனது தலைமையிலான அரசு ஏற்பாடுகளை செய்துள்ளது.

660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கத் திட்டம் நிறுவுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் 26.10.2012 அன்று கோரப்பட்டுள்ளது.

1,600 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அனல் மின் திட்டங்கள் பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து உடன்குடியில் நிறுவ வகுக்கப்பட்ட திட்டம் நான்கு ஆண்டுகளாகியும், துவக்கப்படாமலேயே இருந்தது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினரால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்த இந்த மின் திட்டத்தை விரைந்து செயல்படுத்தும் வகையில், பாரத மிகு மின் நிறுவனத்துடனான கூட்டு ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, தமிழ்நாடு மின்வாரியமே, மாநில அரசின் திட்டமாக செயல்படுத்த ஆணையிட்டேன். இதற்கான சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் வெகு விரைவில் கோரப்பட உள்ளன.

அது போலவே, 800 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அனல் மின் திட்டங்களை வடசென்னையில் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்பட உள்ளன.

1,600 மெகாவாட் திறன் கொண்ட உப்பூர் அனல் மின் திட்டம், 800 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் விரிவாக்கத் திட்டம், 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் மாற்று மின் திட்டம் ஆகியவற்றிற்கு மத்திய அரசின் பல்வேறு ஒப்புதல்கள் கோரப்பட்டுள்ளன. மத்திய அரசின் ஒப்புதல்கள் கிடைக்கப் பெற்றவுடன் இவற்றை நிறுவும் பணிகள் துவங்கும்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் செயலற்ற தன்மையால், அக்கறையின்மையால், அலட்சியத்தால், சுயநலப் போக்கால், இன்று தமிழ்நாடு சந்தித்து வரும் மின்வெட்டு கடினமானது என்றாலும் தற்காலிகமானதே. நான் ஏற்கெனவே கூறியது போல், புதிய மின் திட்டங்கள், ஒன்றன்பின் ஒன்றாக முழுத் திறனுடன் இயக்கத்திற்கு வரவிருப்பதால், இனி வரும் மாதங்களில் மின் தடையின் தாக்கம் படிப்படியாக குறையும். 2013–ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ்நாட்டில் மின் தடை அறவே நீக்கப்பட்டுவிடும் என்று உறுதி அளிக்கிறேன். மின்சாரத்தில் தமிழகம் விரைவில் தன்னிறைவு பெறும்; மின் மிகை மாநிலமாக மாறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் மின்வெட்டு காரணமாக சிறு தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன என்று கூறினார். சிறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையில், சிறு தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் குறைந்தபட்சம் தொடர்ந்து 4 மணி நேரம் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பொறுத்தவரையில், டெல்டா மாவட்டங்களில் 12 மணி நேரம் மின்சாரம் வழங்க நான் ஆணையிட்டேன். இம்மாவட்டங்களில் குறைந்தபட்சம் 3 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரம் வரை மின் உற்பத்திக்கு ஏற்றவாறு மின்சாரம் வழங்கப்படுகிறது. மேலும், தமிழகத்தின் பிற பகுதிகளில் விவசாயத்திற்குக் குறைந்தபட்சம் 3 மணி நேரம் மும்முனை மின்சாரமும், மின்தடை இல்லாத நேரங்களில் இருமுனை மின்சாரமும் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் நிலவுகின்ற மின் பற்றாக்குறை நிலைமை அனைவருக்கும் கவலை அளிப்பதாக இருக்கிறது. பொதுமக்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அனைத்துத் தரப்பினரும் எப்படி கவலைப்படுகிறார்களோ, அதைப் போலவே, அதைவிட ஆயிரம் மடங்கு இந்த அரசு கவலைப்படுகிறது. ஏனென்றால் எங்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. மின்சாரம் வழங்க வேண்டிய கடமையிருக்கிறது. எல்லோருக்கும் சீரான முறையில் மின்சாரத்தை விநியோகிக்க வேண்டிய கடமையிருக்கிறது. ஆகவே, மற்ற அனைவரையும்விட ஆயிரம் மடங்கு, ஒரு இலட்சம் முறை அதிகமாக நாங்கள் கவலைப்படுகிறோம்; நான் கவலைப்படுகிறேன்.

இந்த நேரத்தில் அனைவருக்கும் சில உண்மைகளை மட்டும் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்; சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த மோசமான சூழ்நிலைக்கு நாங்கள் காரணம் அல்ல. நிச்சயமாக எனது தலைமையிலான அரசு காரணம் அல்ல. 2006 ஆம் ஆண்டு நான் ஆட்சியைவிட்டு செல்கின்ற போது தமிழ்நாடு மின்சாரத்தில் உபரி மாநிலமாக இருந்தது; மின்மிகை மாநிலமாக இருந்தது. அதன்பிறகு கடந்த ஆண்டு 2011 இல் நான் மீண்டும் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றேன். திரும்பி வந்து பார்க்கின்ற போது, தமிழ்நாடு மின்குறை மாநிலமாக இருந்தது. மோசமான மின் பற்றாக்குறை சூழ்நிலை நிலவியது. ஆகவே, எங்களைப் பொறுத்தவரை இந்த நிலைமையைச் சீர்செய்ய வேண்டும். அனைவருக்கும் தேவையான மின்சாரத்தை வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆட்சி பொறுப்பேற்ற முதல் நாளிலிருந்தே இந்த அரசு சிரத்தையோடு செயல்பட்டு கடமையாற்றி வருகிறது.

ஆனால், மின்சாரப் பற்றாக்குறை, மின் உற்பத்திக் குறைவு போன்ற பிரச்சினைகளை சரி செய்வது, சீர் செய்வது என்றால் அது ஒரு நாளில் முடியாது, ஒரு வாரத்தில் முடியாது, ஒரு மாதத்தில் முடியாது, ஓர் ஆண்டுகாலத்திலும் முடியாது. அதற்குப் பல நாட்கள் தேவைப்படும். இதிலுள்ள சிரமங்களை நான் ஏற்கெனவே எடுத்துச்சொல்லியிருக்கிறேன். ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது நமக்கு ஏற்கெனவே

மின் உற்பத்திக் குறைவாக இருந்தது. பலரும் எழுப்பிய கேள்வி, சரி, இங்கே மின் உற்பத்திக் குறைவாக இருந்தால் வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரத்தை வாங்கலாமே ஏன் வாங்கக்கூடாது? நிச்சயமாக வாங்கலாம். அதற்காகத்தான் அந்த விளக்கத்தைச் சொன்னேன். நாங்கள் குஜராத் மாநிலத்தோடு ஒப்பந்தம் போட்டோம். 525 மெகா வாட் மின்சாரத்தை வாங்க ஒப்பந்தம் போட்டோம். ஆனால், 230 மெகா வாட்தான் கொண்டுவர முடிந்தது. ஏன் என்றால் அந்த மின்வழித் தடத்தில் நெருக்கடி. அதற்குத்தான் இந்த விளக்கத்தை நான் அளித்தேன். மத்திய அரசுதான் மாநிலத்திற்கும் பிற மாநிலங்களுக்கும் இடையேயான மின்சாரம் பாய்வதற்கு வழித்தடத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழகத்திற்குப் போதுமான அளவில் அந்த மின்வழித் தடம் இல்லையென்றால் அதற்கு என்ன காரணம், எந்த அடிப்படையில் மத்திய அரசு இந்த மின்வழித் தடத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. நீண்டகால கொள்முதல் ஒப்பந்தம் போட்ட மாநிலங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆக, நாங்கள் எப்போது ஆட்சிக்கு வந்தோம் 2011 இல். ஆகவே, இந்த மின்வழித் தட நெருக்கடி ஏற்கெனவே இருந்த ஒன்று ஏன் என்றால் 2006 முதல் 2011 வரை இருந்த முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு நீண்டகால மின்சார கொள்முதல் ஒப்பந்தங்களைப் போடவில்லை. அவர்கள் சுயநல நோக்கத்துடன், சுய லாபம் கருதி வேண்டுமென்றே குறுகியகால ஒப்பந்தங்களைப் போட்டார்கள். அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கினார்கள். Case 1 bidding அடிப்படை என்றால் என்ன? அதாவது, இன்று மின்சாரத்திற்கு யூனிட்டிற்கு இத்தனை ரூபாய் என்று என்ன விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ, இந்த Case 1 bidding-படி அதே விலைக்கு நீண்டகால ஒப்பந்தத்தைப் போட்டால் ஒரு ஏழு ஆண்டுகள், 10 ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தைப் போட்டால், 10 ஆண்டுகளுக்குப் பிறகு மின்சாரத்தின் விலை பல மடங்கு அதிகரித்திருந்தாலும்கூட இந்தக் குறைந்த விலைக்குத்தான் அவர்கள் மின்சாரத்தை வழங்கவேண்டும். அப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் போடுகின்ற மாநிலங்களுக்குத்தான் மத்திய அரசின் வழித்தடத்தை ஏற்படுத்திக்கொடுக்கின்ற நிறுவனம் முன்னுரிமை அளித்து transmission corridor-களை ஏற்படுத்திக் கொடுக்கிறது. அத்தகைய ஒரு ஒப்பந்தத்தைகூட முந்தைய தி.மு.க. அரசு போடவில்லை. அதனால், தமிழகத்திற்குத் தேவையான மின்வழித் தடம் கிடைக்கவில்லை. அதைத்தான் நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

நாங்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபிறகு, சில ஒப்பந்தங்களைப் போட்டோம். ஆனால், எங்களுக்கு முன்னுரிமை இல்லை, இந்த அரசுக்கு முன்னுரிமை இல்லை, ஏன் என்றால் இவை புதியதாகப் போடப்பட்ட ஒப்பந்தங்கள். அதனால்தான், குஜராத் மாநிலத்தோடு ஒப்பந்தம் போட்டாலும், 500 மெகா வாட்டிற்கு ஒப்பந்தம் போட்டாலும், 200 மெகா வாட் அளவிற்குதான் கொண்டுவர முடிகிறது. மத்திய அரசிடம் நான் 1,000 மெகா வாட் கேட்டதற்கு 100 மெகா வாட்தான் கொடுத்தார்கள். அதில்கூட 78 மெகா வாட்தான் இங்கே கொண்டுவர முடிகிறது. இன்னும் சில ஒப்பந்தங்களைப் போட்டிருக்கிறோம். ஒட்டுமொத்தமாக 1,100 மெகா வாட் மின்சாரம் பெறுவதற்கு புதியதாக ஒப்பந்தங்கள் போட்டிருக்கிறோம். ஆனால், அவற்றில் வெறும் 85 மெகா வாட்தான் கொண்டுவர முடிகிறது. ஏன் என்றால், மின்வழித் தடத்தில் நெருக்கடி. மீண்டும் அதே பிரச்சினைக்கு வருகிறோம், அதே காரணத்திற்கு வருகிறோம். ஏன் தமிழகத்திற்குப் போதுமான மின்வழித் தடம் இல்லை. ஏன் என்றால் நமக்கு முன்னுரிமை இல்லை, ஏன் நமக்கு முன்னுரிமை இல்லை, ஏன் என்றால் நீண்டகால ஒப்பந்தங்களைப் பிற மாநிலங்களோடு போடவில்லை. அந்த நீண்டகால ஒப்பந்தங்களைப் போட தவறியது யார். முந்தைய தி.மு.க. அரசு. திரு. கருணாநிதி தலைமையிலான மைனாரிட்டி தி.மு.க. அரசுதான் இந்த நிலைமைக்குக் காரணம்.

சரி, மத்திய அரசாவது நமக்கு ஒத்துழைப்புத் தருகிறதா? மத்திய அரசிடம் பலமுறை கேட்டுவிட்டோம். மின்சாரத்தை வழங்குங்கள் என்று. ஆனால், அவர்கள் வழங்கவில்லை. எத்தனை அமைச்சர்கள் இங்கே தமிழகத்தில் இருந்து சென்றிருக்கிறார்கள். காங்கிரஸ் அமைச்சர்கள், தி.மு.க. அமைச்சர்கள், இன்றும்

அமைச்சர்காளக இருக்கிறார்கள். தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுத்தர அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா?

அதுமட்டுமல்ல, தமிழகத்தை வஞ்சிக்கிறார்கள் நான் இப்போது குறிப்பிட்டுச் சொன்ன பல மின் திட்டங்களில் பல மின் திட்டங்களில் அனைவரும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். புதிய மின் திட்டங்களை தொடங்கவில்லை, தொடங்கவில்லை என்று சொன்னால் இது ஏதோ ஒரு மேஜிக் மாதிரி செய்கின்ற வேலை அல்ல. ஒரு புதிய மின் திட்டத்தை மின் உற்பத்தி திட்டத்தை துவங்க வேண்டுமென்றால் மத்திய அரசிடமிருந்து பல ஒப்புதல்களைப் பெற வேண்டியுள்ளது. அதன்பிறகுதான் பணிகளைத் துவங்க முடியும். வேண்டுமென்றே தமிழ்நாட்டில் செயல்படுத்த திட்டமிட்டிருக்கும் பல பெரிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்காமல் தேவையான அனுமதியை வழங்காமல் காலத்தை தாமதப்படுத்துகிறது. காலதாமதம் செய்து வருகிறது. இதற்கு யார் காரணம்? இதற்கு இந்த அரசை குற்றம் சொன்னால் எப்படி? அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் விரிவாகச் சொன்னேன். பல அனுமதிகளை மத்திய அரசு தர வேண்டியுள்ளது. ஆனால் தர மறுக்கிறது. புதிய திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்கவில்லை. ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற மின் உற்பத்தி நிலையங்களுக்குப் போதுமான நிலக்கரியை வழங்குவது இல்லை. நமது மொத்தத் தேவையில் ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கும் மின் நிலையங்களுக்கு தேவைப்படுகின்ற நிலக்கரியில் 80 விழுக்காடுதான் கொடுக்கிறார்கள். ஆகவே ஒருபுறம் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு காட்டிய அலட்சியம், அக்கறையின்மை, நிர்வாகத் திறமையின்மை. இன்னொருபுறம் மத்திய அரசு வேண்டுமென்றே நம்மை வஞ்சிக்கிறது. இருப்பினும் இதனால் நாங்கள் சோர்ந்துவிடவில்லை. முந்தைய தி.மு.க. அரசு என்ன தவறு செய்திருந்தாலும் அதை சரி செய்தே தீருவோம். என்ற வைராக்கியத்துடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு நம்மை வஞ்சித்தாலும் வெற்றி பெற்றே தீருவோம். வாழ்ந்து காட்டுவோம் என்ற வைராக்கியத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, என்னதான் மத்திய அரசு நம்மை வஞ்சித்தாலும் நான் இதில் தோல்வி அடையமாட்டோம். வெற்றி காண்போம். மீண்டும் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக ஆக்காமல் நான் ஓயமாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இதனுடைய தொடர்ச்சியாக நான் அன்பார்ந்த தமிழக மக்களுக்கு இந்த மாமன்றம் மூலமாக விடுக்கின்ற ஒரு வேண்டுகோள் என்னவென்றால் தமிழக மக்களே இன்றைக்கு நிலவுகின்ற மோசமான மின் வெட்டு நிலைமைக்கு இந்த அரசு காரணமில்லை என்பதை தெளிவாக எடுத்துச்சொல்லி விட்டேன். இருப்பினும், நீங்கள் நம்பி எங்களிடம் இந்த ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருப்பதால் நீங்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து, என் மீது நம்பிக்கை வைத்து ஆட்சிப் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்திருப்பதால் உங்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்க வேண்டிய கடமையும், பொறுப்பும் எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, அந்த இலக்கை நிச்சயமாக அடைந்தே தீருவோம். மோசமான மின் வெட்டு நிலைமையை கடந்து விட்டோம். அது முடிந்து விட்டது அது கடந்த காலத்தில் இருந்தது. என்னைப் பொறுத்தவரை தமிழக மக்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இத்தனை காலம் பொறுத்துவிட்டீர்கள். இன்னும் ஓராண்டு காலம். ஓராண்டு காலம். ஓராண்டுக்கு என்றுகூட சொல்ல மாட்டேன். அடுத்த ஜூன் மாதம் வரை சற்று பொறுத்துக் கொள்ளுங்கள். Bear with me என்று கேட்கிறேன். சற்று பொறுமை காட்டுங்கள். படிப்படியாக இனிமேல் விரைவில் மின் நிலைமை சீரடையும். மின் வெட்டு சீரடையும். நான் ஏற்கெனவே தெளிவாக எடுத்துரைத்தபடி 2013 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த மின் வெட்டு நிலைமை அறவே நீக்கப்படும். தமிழ்நாடு மீண்டும் ஒளிமயமான மாநிலமாகத் திகழும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*******